## 8.61 பணியமைப்பு உள்ளாட்சி பணி தினக்கூலி பணியாளர்களை முறையான பணியிடத்தில் நியமனம் செய்வது ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குகல் (நப.3) துறை

அரசாணை (நிலை) எண்.125 நாள் : 27.05.1999

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.1644 ஊ. வ. ம. உ. துறை நாள் 12–10–1979
2. அரசாணை (நிலை) எண்.101 ந.நி.கு.வ. துறை நாள் 30–4–1997
3. அரசாணை (நிலை) எண்.112 ந.நி.கு.வ. துறை நாள் 15–5–1997
4. அரசாணை (நிலை) எண்.70 ந.நி.கு.வ. துறை நாள் 5–5–1998
5. அரசாணை (நிலை) எண்.71 ந.நி.கு.வ. துறை நாள் 5–5–1998
6 அரசாணை (நிலை) எண்.198 ந.நி.கு.வ. துறை நாள் 26–10–1998
7. நகராட்சி நிர்வாக ஆணையரது ந.க.எண்.27350 / 99 எப்3 நாள் 28–4–99,

**ஆணை**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 1.10.79ம் நாளுக்கு முன்பிருந்தே நகராட்சிகளில் பணிபுரிந்த தினக்கூலி பணியாளர்களில் பணி முறிவு இன்றி மேற்குறிப்பிட்ட தேதியில் பத்தாண்டு பணி முடித்தவர்கள் அனைவரையும் நிரந்தரப் பணியமைப்புக்கு கொண்டுவந்து காலமுறை சம்பளத்தில் (Time Scale of Pay) ஊதியம் நிர்ணயம் செய்ய உத்தரவிடப்பட்டது. மேலும் நகராட்சிகளின் வேலை பளுவையும் தேவையையும் நிதி நிலைமையையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு நகராட்சிக்கும் சில்லரை செலவினப் பணியிடத்தில் மொத்த எண்ணிக்கை (Total Strength) நிர்ணயிக்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது.

2. நகராட்சிகளில் துப்புரவு தெருவிலக்கு பராமரிப்பு, குடிநீர் வழங்குதல் அகிய பணிகள் தவிர பிற பணிகளை கவனிக்கவும் முறையான ஊதிய விகிதத்தில் பணியிடங்களை தோற்றுவிக்க முடியாத சூழ்நிலையில் அவசர அவசியம் கருதி சில்லரை செலவினம் / வேலைப்பளு அடிப்படையில் தினக்கூலி பணியார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய தினக்கூலி பணியாளர்களில் பணியை வன்முறைப்படுத்துவது குறித்து பல வழக்குகள் உயர்நீதி மன்றத்திலும் தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பயத்திலும் நிலுவையில் உள்ளன. தினக்கூலி பணியாளர் நகராட்சிகள், பேருராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணிபுரிந்து வருகின்றனர். இதுபோன்ற பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களை நிரந்தரப் பணியில் அமர்த்துவது குறித்து பல்வேறு முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன.

3. மேலே 2 முதல் 6 வரையில் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் துப்புரவு பணியாளர், வாகன ஓட்டுநர், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர், குடிநிர் திட்டப் பராமரிப்பு பணியாளர் ஆகிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கு புதிய அளவுகோல்கள் நிர்ணயம் செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் இப்பணிகளில் ஈடுபட்டுள்ள தினக்கூலி பணியாளர்களின் பணி வரன்முறை படுத்தப்பட்டு வருகிறது. இந்த பணிகள் தவிர இதர பணிகளிலும் பணிபுரியும் தினக்கூலி பணியாளர்களை முறையான பணியிடங்களில் நியமிப்பது தொடர்பாக பரிசீலனை செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இதே அடிப்படையில் பேரூராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் தினக்கூலி பணியாளர்களாக பணிபுரிபவர்களின் பணியினை முறைப்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து பின்வருமாறு ஆணையிடுகிறது.

1) ஒவ்வொரு நகராட்சியிலும், துப்புரவு, வாகன ஓட்டுநர், தெருவிளக்கு பராமரிப்பு, குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகள் தவிர பிற பணிகளை கவனிக்க நியமிக்கப்பட்ட தினக்கூலி பணியாளர்களின் பெயர், பதவி வாயிலாக தினக்கூலி பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்ட நாள், கல்வி தகுதி வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டிருப்பின் அதுபற்றிய விவரங்கள் ஆகியவை கொண்ட அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். ஆனால் கட்டணக் கழிப்பிடங்களை பராமரிப்பது, சந்தைகளில் துறை மூலம் கட்டணம் வசூல் செய்தல் போன்ற பணிகளில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இது பொருந்தாது. ஏனெனில் இப்பணிகள் இனிவரும் காலத்தில் ஏலம் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் தனியார்களால் செய்யப்பட வாய்ப்புள்ளது. பேரூராட்சிகளில்

31.12.96க்கு முன்பிருந்தும், நகராட்சிகளிலும், சென்னை மாநகராட்சி தவிர இதர மாநகராட்சிகளிலும் 1.10.96க்கு முன்பிருந்தும், சென்னை மாநகராட்சியில் 4.5.99க்கு முன்பிருந்தும் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிபவர்கள் மட்டுமே மேற்படி பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். இந்த பட்டியலின் நகல் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளைப் பொறுத்தவரை நகராட்சி நிர்வாக ஆணையருக்கும், பேருராட்சிகளை பொருத்தவரை பேருராட்சிகளின் இயக்குநருக்கும் சென்னை மாநகராட்சியை பொருத்தவரை அரசுக்கும் 31.10.99க்குள் அனுப்பப்பட வேண்டும்.

2) மேற்கண்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள தினக்கூலி பணியாளர்களை அவர்களின் தகுதிக்கேற்ப சம்பந்தப்பட்ட நகராட்சிகள் / மாநநகராட்சிகள் / பேருராட்சிகளில் அவ்வப்போது ஏற்படும் காலி பணியிடங்களில் (Entry level posts only) நியமனம் செய்து அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து அவர்களது பணிவரன்முறை செய்யப்படுவதுடன் பணிக்கால பயன்களும் கணக்கிடப்பட வேண்டும். பணிவரன்முறை செய்யப்படுவதுடன் பணிக்கால பயன்களும் கணக்கிடப்பட வேண்டும். பணி வரன்முறை செய்யப்படும் காலத்திலிருந்து ஓராண்டுவரை இவர்கள் மாதம் ரூ.2000/– என்ற தொகுப்பூதியத்தில் அமர்த்தப்படுவார்கள். ஓராண்டுக்கு பிறகு காலமுறை ஊதியத்தில் கொண்டு வரப்படுவார்கள். தினக்கூலி பணியாளர்கள் முறையாக பணியிடத்தில் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு பணிபுரிந்த காலம் பணப்பயன்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. தினக்கூலி பணியாளர்கள் மேலே பத்தி 3(1)ல் கூறப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள காலியிடங்களில் நியமனம் செய்யப்படும் வரையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் புதிய நியமனங்கள் செய்யப்படக்கூடாது.

3) தினக்கூலி பணியாளர்களை ஒரு குறிப்பிட்ட பதவியில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்ய அந்நகராட்சி / பேருராட்சியில் தற்போது பணிபுரிபவர்களின் தினக்கூலி பணியாளா் பட்டியலிலிருந்துதான் தேர்வு செய்யவேண்டும். குறிப்பிட்ட ஒரு பதவியில் ஏற்படும் காலியிடத்திற்கு அந்நகராட்சியில் / பேரூராட்சியில் தினக்கூலி பணியாளா் எவரும் இல்லை என்றால் நகராட்சி நிர்வாக ஆணையர் /பேரூராட்சி இயக்குநர் மூலம் அப்பதவிக்கு தேவையான பணியாளர்கள் பிற நகராட்சிகள் / பேரூராட்சிகளில் மேற்படி பட்டியலில் உபரியாக இருக்கும் பணியாளர்களை தேர்வு செய்து நிரப்பப்பட ண்டும். மாநகராட்சிகளுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது.

4) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1585 / நி.கெ./தனி/99 நாள் 6–5–99ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சு.மாலதி**
அரசு செயலாளர்